ஆறு அலகுகளும் பின்வரும் ஒழுங்கில் தரப்பட்டுள்ளன (அடைப்புக்குறிக்குள் முதன்மைத்திறன் பகுதிகள்):

**1 பண்பாடும் அடையாளமும்:** ஒரேமாதிரி எனினும் வேறுபட்டது! (அடையாள மேம்பாட்டுக்கான ஊக்குவிப்பு)

**2 புலம்பெயர் கதைகள்:** உலகம் எங்கள் வகுப்பறையில் (தன்வரலாற்றுக் கற்கை)

**3 எங்கள் மொழிகள்:** நாங்கள் ஒன்றுக்கு மேற்பட்ட மொழிகளைப் பேசுகிறோம்! (ஒவ்வொரு நாள் வாழ்வின் பன்மொழி ஒரு வளம் என்னும் விழிப்புணர்வு)

**4 பல்பண்பாட்டுத் தொடர்பாடல்:** ஒருவரோடொருவர் ஒத்துப்போதல் (தொடர்பாடல் திறன்)

**5 மோதல்கள்:** தீர்வுகளை ஒன்றாக நாடுதல் (மோதல்களைத் தவிர்க்கவும் தீர்ப்பதற்குமான ஆற்றல்)

**6 சனநாயகமும் சிறுவர் உரிமையும்:** நாங்கள் தலையிடுவோம் (நீதி மற்றும் சனநாயகம் பற்றிய எண்ணக்கருவை விளங்கிக்கொள்ளல்)

மாணவர்களின் சொந்த அனுபவங்கள் அவதானிப்புகள் மற்றும் மனப்பாங்குகளுடன் பல பாடப்பொருட்கள் தொடர்புபட்டவை. வகுப்பறையுள் இந்தத் தலைப்புகளுடன் இயங்குவது ஆசிரியரின் பெரும் உணர்திறன் நம்பிக்கை மற்றும் ஏற்றுக்கொள்ளும் முறையினால் கட்டியெழுப்பப்பட்ட வகுப்பறை சூழல் என்பவற்றை வேண்டி நிற்கிறது. இவ்வின்றியமையா முன்தேவைகள் இல்லாது மாணவர்கள் தம்மை மனந்திறக்க முடியாததாகலாம் அல்லது மேற்குறிக்கப்பட்ட இலக்குகளை முழுமையாகவோ பகுதியாகவோ எட்டப்படமுடியாது.

## 3. பா.மொ.க கல்வியில் திறன் சார்ந்த நோக்குநிலை

தற்கால கற்பித்தற்கலையின் இன்றியமையாத கோட்பாடாக திறன் திசைமுகப்படுத்தல் "அடிப்படைகளும் பின்னணிகளும்" கைநூலில் (இயல்கள் 2, 5, 9) விரிவாக விளக்கப்பட்டுள்ளது. தற்போதைய தொகுதியின் தலைப்புக்கு, குறிப்பாக மூன்று திறன்கள் முதன்மையான இன்றியமையாத தன்மைகள் உடையன.

அ) *விளங்கிக்கொள்ளும்திறன்,* இங்கு அடையாளம் காணும் திறனுடன் விபரிக்கப்பட்டுள்ளது: அகம் சார்ந்த திறன்களை வளர்க்கவும், தொடர்பாடலின் வழிமுறைகளின் பகுதியாக ஒருவரைப் பார்ப்பதற்கும் எல்லாப் புலன் உணர்வுகளாலும் மற்றும் அக உணர்வினை உணர்ந்துகொள்வதற்குமான புலன்சார்ந்த, உணர்ச்சிசார்ந்த திறனின் அறிகை வளர்ச்சியுடன் இது தொடர்புற்றுள்ளது. கற்போர் அவர்களது உணர்ச்சிகரமான உணர்வுடன் தமக்கென ஆக்கிக்கொள்ளும் பொருத்தமான வடிவங்களுடனும் சீரிய முறையிலே அடையாளம் காணப்படுகின்றனர்.

ஆ) *பிரதிபலித்தல் திறன்* (வெளிப்படுத்தும் திறன்) மொழியூடாக காத்திரமான தொடர்புகளைப் பெருக்கும் நிலையில் அறிகைத்திறன் வளர்ச்சியுடன் பிரதிபலித்தல் திறன் தொடர்புபடுகிறது. அதாவது உருவற்ற கருத்துகள், அவைபற்றி கலந்துரையாடி பிரதிபலித்தல்.

இ) தொடர்பாடல் திறன், ஒருவர் வாழும் சூழலில் தொடர்பாடல் செயலால் உணரப்பட்டு பிரதிபலித்தலை 'செயற்படுத்துவதற்கான தொடர்பாடல் திறன்' வெளிப்படுத்துகிறது. அதன் விளைவாக ஒரு தனியாள் தான் வாழும் சூழலில் செல்வாக்குக்கு உட்படுத்தி செயற்படுத்துவதற்கான புதிய நோக்குகளையும், புதிய வெளிப்பாட்டு வடிவங்களையும் வளர்க்க முடியும்.

ஹொல்ஸ்ப்றெஹரின் கூற்றின்படி (1999, நூற்பட்டியல் குறிப்புகளை பார்க்கவும்), பல்பண்பாட்டு திறன்கள் என்னும் எண்ணக்கரு பாடநிலையையும் வாழிடச் சூழல் மற்றும் சமூக நிலையுடன் இணைப்பதைச் சுட்டிக்காட்டுகிறது. இதனால், பிள்ளைகளும் இளவயதினரும் தம்முடைய தன்பயனைப் பட்டறிந்துகொள்வர். இந்த நான்காவது வகையே புதிய அறிக்கை வடிவங்கள், பிரதிபலித்தல் வடிவங்கள் மற்றும் நடத்தை வடிவங்கள் மேம்பாடடைய ஒப்புதலளிக்கின்றது.

## 4. 'வாழும் உலகு' என்பது ஓர் இன்றியமையாத அடிப்படையான எண்ணக்கரு.

மாணவரின் உண்மையான வாழும் உலகு பற்றிய ஆசிரியவியலையும் கற்பித்தலையும் நோக்கும்போது இன்றியமையாமை பல தடவை "அடிப்படைகளும் பின்னணிகளும்" என்ற கைநூலில் குறிப்பிடப்பட்டது (5அ.4 மற்றும் 3அ 2.3 இயல்களைப் பார்க்க). வாழும் உலகுக்கான நோக்குநிலை ஒரு முதன்மைப் பங்கை வகிக்கின்றது. குறிப்பாக பல்பண்பாட்டியத்தையும் பல்பண்பாட்டியல் தேர்ச்சியையும் கருத்தில் கொள்ளும்போது தற்சமயம் பன்மொழிச் சமூகத்தின் மொழித் தன்மைகளை இது கருத்தில் கொள்கின்றது. ஒவ்வொரு நாளைய பன்மொழியும் - பல்வேறு மொழிகளுடனும் பல்வேறு மொழிகளுக்கிடையிலும் வாழ்தல். இது ஒரு வாழ்ந்த உண்மையாகும். அது தேர்வுசெய்யப்பட்டுப் பாராட்டப்பட வேண்டியது (குறிப்பாக "எங்கள் மொழிகள்" அலகு 3ஐ ஒப்பிட்டுப் பார்க்கவும்).

தான் வாழும் உலகின் குடிமகனாக / குடிமகளாக பா.மொ.க பிள்ளை எப்போதும் ஒரு சமூகத்தின் உறுப்பினர் ஆகவும் உள்ளது. அந்த வகையில் அவர் ஒரு தளத்தின் அங்கத்தவர் ஆகவும் வாழும் உலகு மற்றும் சமூகத் தளத்தின் வழியே இயங்குகின்றார். இந்த நிலைகளுடன் பன்மடங்கான பல்பண்பாட்டியல் ஒன்றோடொன்று மயங்கல் மற்றும் செயலெதிர்ச்செயல் சூழல்களுடன் இணைக்கப்படுகின்றன. இவை பல்பண்பாட்டுக் கற்றல், அடையாள நடைமுறைகளைத் தேர்வுசெய்தல் மற்றும் சமூக அமைப்பு நிலைப்பாடுகள் என்பனவற்றை வேண்டி நிற்கின்றது. அதேவேளையில் அவை மக்கள் தாமாகவே இயங்கும், செயற்படும் குடிகளாக பட்டறிவு பெறுபவர்களாக உறுதிசெய்கின்றன. இன்றியமையாத இந்த கொள்கையைப் பின்வரும் பகுதி மிக விரிவாக விளக்குகின்றது.